தலையிடுவது என்பது இயலாத காரியம். ஆனால் பொது விநியோக முறையின் மூலமாக எந்த அளவிற்கு மக்களுக்குத் தேவையோ அந்த அளவிற்கு அரிசி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. வைகை சா. துரைசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி கொண்டு வருவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே ஆந்திர மாநில அரசோடு பேசி இங்கே அரிசி கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான அளவிற்கு அரிசி நம்மிடத்திலே இருக்கிறது. தேவைப்படுமானால் ஆந்திர அரசோடு பேசி ஆவன செய்வதற்கு நமது அரசு தயாராக இருக்கிறது.

## (ஆ) சென்னை அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னையில் உள்ள அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள், 'டிப்ளமாவிற்கு' பதிலாக 'பட்டமாக்கக்' கோரி உள்ளிருப்புப்போராட்டம் நடத்துவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

சென்னையிலுள்ள அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் கடந்த 19—1—1987 லிருந்து ஏறத்தாழ 6 வாரகாலம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினார்கள் :

(i) தற்போதுள்ள டிப்ளமா பாடத்தை, பட்டப் படிப்பு நிலைக்கு மாற்றுதல்.

(ii) தற்போதுள்ள விஷுவல் கம்யூனிகேஷன் டிசைன் மற்றும் இண்டஸ்டிரியல் டிசைன் பட்டப் படிப்புகளுக்கு சென்னை பல்கலைக் கழகத்தின் நிரந்தர இணைப்பு கோரல்.

(iii) மாணவர் சங்கத்தினை சட்ட பூர்வமாக அங்கீகரித்து அனுமதி அளித்தல்.

1987 மார்ச் 11] [திரு. சி. பொன்னையன்]

2. இது தொடர்பாக மாணவர்களிடம் பேசி சுமுகமான முடிவு காண நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

(i) மாணவர்கள் தற்போதுள்ள டிப்ளமா பாடத்திற்கும் பட்டப் படிப்பிற்கும் பெரிய வேறுபாடு ஏதுமில்லை என்று கூறி டிப்ளமா மாணவர்களுக்கு பட்டம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். ஏனெனில், டிப்ளமா பாடங்கள் மாநில தொழில் நுட்பக் கல்விக் குழுவுடன இணைந்தவை. பட்டப் படிப்புகள் பல்கலைக் கழகப்பாடத்திட்டப்படி நடத்தப்பட்டு பட்டப் படிப்புகளுக்கான தேர்வுகள் பல்கலைக் கழகங்களால் நடத்தப்படுகின்றன. டிப்ளமா பாடத்திற்கும், பட்டப் படிப்பிற்கும் வகுக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தை ஒப்பு நோக்கினால், வகுப்பறைப் பாடங்களும் செய்முறைப் பாடங்களும் இரண்டிற்கும் முற்றிலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம், இம் முரண்பாடான விஷயத்தில் பல்கலைக் கழக ஆணைகளை ஒரே நாளில் பெற்றுத் தர வலியுறுத்தி மாணவர்கள் பிடிவாதமாகக் கிளர்ச்சி செய்தனர். அவர்களது கிளர்ச்சி முற்றிலும் நியாயமற்றதாகும். இது சம்பந்தமாகப் பல்கலைக் கழக ஆணைகளை ஒரே நாளில் பெறுவது இயலாத காரியம் என்பதை மாணவர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மாணவர்கள் கிளர்ச்சியை அப்போது கைவிடவில்லை. இருந்தபோதிலும், டிப்ளமா மாணவர்கள், பட்டப்படிப்புத் தகுதி பெற, வரும் கல்வியாண்டில் இருந்து அவர்களுக்கு என ஒரு ஓராண்டுகால பகுதி நேர பட்டப்படிப்புத் திட்டம் வகுப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, பல்கலைக் கழகத்துடன் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் தொடர்பு கொண்டதில், இப்பட்டப் படிப்பிற்கு விரிவான பாடத்திட்டம் தயாரிக்க ஒரு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வல்லுநர் குழு, ஓவியக்கலை மற்றும் சிற்பக்கலைப் பாடங்களில் முழுநேர நுண்கலைப் பட்டப் படிப்புக்கான விரிவான பாடத் திட்டம் தயாரிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. 1987-88-ம் கல்வியாண்டு முதல் இப்பட்டப் படிப்பு நடத்த அனுமதி கோரி விரைவான நடவடிக்கை மேற்கொள்ள பல்கலைக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை விளக்க வேண்டி பெற்றோர்களை அழைத்து தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் பேசியதில் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

(ii) சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்பு, நிரந்தரமாக, விஷுவல் கம்யூனிகேஷன் டிஸைன் மற்றும் இண்டஸ்டிரியல் டிஸைன் ஆகிய பட்டப்படிப்பு பாடங்களுக்குப்பெறுவது, மாணவர்களுக்குத் தொடர்புடைய ஒரு பிரச்சினை அல்ல. ஏனெனில், பல்கலைக் கழக இணைப்பு தற்காலிமாக இருந்தாலும். அப்பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு எவ்வித பாகுபாடும் இன்றி பட்டம் அளிக்கப்படுகிறது. மேலும் பட்டப் படிப்புப் பாடங்களை 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு தற்காலிக இணைப்பு

அளித்து அப்பட்டப் படிப்பு முழு வசதிகளையும் பெற்று நன்கு வளர்ச்சிஅடைந்தபிறகு நிரந்தர இணைப்பு வழங்குவது பல்கலைக் கழகத்தின் நடைமுறையாகும். எனவே மேற்குறிப்பிட்ட பட்டப் படிப்புப் பாடங்களுக்கும் காலப் போக்கில் சென்னைப் பல்கலைக் கழக நிரந்தர இணைப்பு கிடைக்கும்.

(iii) கல்லூரி முதல்வர், மாணவர்கள் சங்கம் அமைப்பது தொடர்பாக முன்னரே முடிவு எடுத்து ஒரு தற்காலிக மாணவர் பிரதிநிதிக்குழு அமைக்க ஒப்புதல் அளித்துள்ளார். இந்த தற்காலிகக் குழு, மாணவர் சங்கத்தேர்தலுக்கு முன்பாக அமைக்கப் பட்ட ஒரு இடைக்கால ஏற்பாடாகும்.

3. அனைத்து பெற்றோர்கள் கூட்டம் ஒன்று நடத்தினால் நலம் என்று கருதி அக்கூட்டம் 24—2—1987 அன்று தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்டு, விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. அதன் விளைவாக மறுநாளே மாணவர்கள் போராட்டத்தினைக் கைவிட்டார்கள். வகுப்புகள் மீண்டும் சுமுகமான முறையில் துவங்கப்பட்டு விட்டன. இப்போது கல்லூரி நன்றாக நடந்துகொண்டு வருகிறது.

**4. அறிக்கைகள் அளித்தல்.**

**பொதுக் கணக்குக் குழு.**

THIRU T. VENKATA REDDY: On behalf of the Chairman of the Public Accounts Committee, I present the following Reports:—

1. *Forty-Second Report* on the further action taken by the Government on the recommendations contained in the Eighth Report (Seventh Assembly), and its earlier reports on the Accounts of the Government of Tamil Nadu for the years 1963-64 to 1965-66 and 1969-70 to 1971-72 relating to Public Works Department and Transport Department.

2. *Forty-third Report* on the Excesses Over Voted Grants and Charged Appropriations for the year 1982-83.

(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பில் ஒன்றும் ஏற்ற வேண்டாம். பத்திரிகைகளும் வெளியே பிரசுரிக்க வேண்டாம். வேண்டுமானால் இன்னும் ஒரு நாள் விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.